(ஒன்பதாவது பாராளுமன்றம் - ஐந்தாவது கூட்டத்தொடர்)

இல. 1(6).]

# பாராளுமன்றம்

## 1 ஆம் ஒழுங்குப் புத்தகத்துக்கான அனுபந்தம்

## 2024 ஏப்ரல் 05 வெள்ளிக்கிழமை வெளியிடப்பட்டது

---

## எழுத்துமூல விடைக்கான வினாக்கள்

**(2024, ஏப்ரல் 24, புதன்கிழமை)**

2039/2024

கௌரவ விஜித ஹேரத்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2023 ஜனவரி தொடக்கம் இதுவரை சுற்றுலாக் கைத்தொழில்துறை சார்ந்ததாக சேவை வழங்கிவருபவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு துறை வாரியாக வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(ii) அவர்களில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள மற்றும் பதிவு செய்யப்படாதுள்ளதாக அடையாளம் காணப்பட்டுள்ள எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) அவர்கள் பதிவு செய்யப்படும் செயல்முறையியல் யாதென்பதையும்;

(iv) பதிவு செய்யப்பட்ட சேவை வழங்குனர்களில் 2022 ஜனவரி முதல் இதுவரை பதிவு இரத்துச் செய்யப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(v) மேற்படி ஒவ்வொரு சேவை வழங்குனரின் பெயர், முகவரி, வணிகப் பெயர், பதிவு இரத்துச் செய்யப்பட்ட திகதி, இரத்துச் செய்யப்படுவதற்கான காரணம் மற்றும் அதற்காக பரிந்துரைத்த அலுவலரின் பெயர் மற்றும் பதவி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சுற்றுலாக் கைத்தொழில்துறையுடன் தொடர்புடைய சுற்றுலாச் சங்கங்கள்/ நிறுவனங்கள்/நபர்களிடமிருந்து 2022 ஜனவரி முதல் இதுவரை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபைக்கு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகள்/ மேன்முறையீடுகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளை/மேன்முறையீடுகளை முன்வைத்த சங்கத்தின்/ நிறுவனத்தின்/நபரின் பெயர், முகவரி, முறைப்பாடு/மேன்முறையீடு கிடைத்த திகதி மற்றும் அதன்மீது மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iii) மேற்படி முறைப்பாடுகள்/மேன்முறையீடுகள் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2040/2024

கௌரவ விஜித ஹேரத்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையில் பதிவு செய்யப்பட்டுள்ள ஒவ்வொரு சேவை வழங்குனரின் பெயர், முகவரி, வணிகப் பெயர் மற்றும் பதிவிற்காக விண்ணப்பித்த திகதி, தற்காலிக மற்றும் நிரந்தர பதிவுச் சான்றிதழ் வழங்கப்பட்ட திகதி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

(ii) தற்காலிக மற்றும் நிரந்தரச் சான்றிதழ்கள் வழங்கப்படுவதற்கு முன்னர் சேவை வழங்கும் நிலையங்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனவா என்பதையும்;

(iii) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(iv) சோதனை செய்யப்பட்டதாயின், திகதி, அலுவலர்களின் பெயர்கள், பதவிகள், அவதானிப்புகள், பயணித்த வாகனத்தின் வகை, பதிவு இலக்கம், உரிமையாளரின் பெயர், செலுத்தப்பட்ட தொகை மற்றும் செலுத்தப்பட்ட விதம் ஒவ்வொரு நிலையத்திற்மைவாக வெவ்வேறாக யாவையென்பதையும்;

(v) எந்தவிதமான சோதனைகளையும் மேற்கொள்ளாது தற்காலிகச் சான்றிதழ் நீடிக்கப்பட்ட சுற்றுலாத் துறை தொழில்முயற்சிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(vi) மேற்படி ஒவ்வொரு தொழில்முயற்சியினதும் உரிமையாளரின் பெயர், வணிகப் பெயர், தற்காலிக சான்றிதழ் நீடிக்கப்பட்ட திகதி, நீடிப்பதற்கான பரிந்துரைகளை வழங்கிய அலுவலரின் பெயர் மற்றும் பதவி என்பன வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2041/2024

கௌரவ விஜித ஹேரத்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2022 ஆம் ஆண்டு முதல் 2023 ஆம் ஆண்டு வரை இலங்கை சுற்றுலா ஊக்குவிப்புப் பணியகத்தினால் வெளிநாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஊக்குவிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்தின் பெயர், மேற்கொள்ளப்பட்ட நாடு, திகதி, அதற்காக மேற்குறித்த பணியகத்தினால் உறப்பட்ட செலவு, விமானப் பயண டிக்கெட், தங்குமிட வசதிகள் உட்பட உறப்பட்ட ஏனைய செலவுகள் தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திற்காகவும் மேற்படி பணியகம்/வெளி நிறுவனங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி பங்குபற்றிய ஆட்களின் பெயர்கள், முகவரிகள், மற்றும் பதவிகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு நிகழ்ச்சித்திட்டத்திலும் பங்குபற்றிய வெளிநபர்களைத் தெரிவு செய்த முறையியல் யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2024 மே 07, செவ்வாய்க்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

3/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒவ்வொரு வருடமும் அதிக வறட்சியான காலநிலை நிலவும் காலப்பகுதிகளில் கண்டி, பன்வில மற்றும் உடுதும்பரை பிரதேச செயலக ஆளுகைப் பிரதேசங்கள் உட்பட மத்திய மலைநாட்டின் பல பிரதேசங்களிலுள்ள ஒதுக்குக் காடுகளையும் நீரேந்துப் பிரதேசங்களையும் சார்ந்த காடுகளும் சிறிய பற்றைக் காடுகளும் தீ வைக்கப்படுகின்றன என்பதையும்;

(ii) அதன் காரணமாக நீர் ஊற்றுக்கள் வற்றிப்போதல், மழை காலங்களில் மலை உச்சிகளிலுள்ள கற்கள் புரளுதல் மற்றும் மண்சரிவுகள் ஏற்படுதல் போன்ற சேதங்கள் ஏற்படுகின்றன என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) ஆமெனில், மேற்படி தீ வைப்புகளைத் தடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) வெப்பமான காலநிலையுடன் வேகமாகப் பரவும் தீயை கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) உணர்திறன் வாய்ந்த சூழல் தொகுதியைப் பாதுகாப்பதற்காக நிரந்தரமான தீர்வு வழங்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்தீர்வு யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

41/2024

கௌரவ புத்திக பத்திறண,— நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் 1948.02.04 ஆம் திகதியின் பின்னர் மரண தண்டனை விதிக்கப்பட்டதையடுத்து தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட ஆட்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்ட ஆட்களின் மரணச் சான்றிதழ்களை உறவினர்களிடம் கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) ஆமெனில், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) முன்னாள் பிரதம அமைச்சர் கௌரவ எஸ்.டப்ளியூ.ஆர்.டி. பண்டாரநாயக்க அவர்களை படுகொலை செய்தமை தொடர்பில் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்ட தல்துவே சோமாராம தேரரின் மரணச் சான்றிதழ் இதுவரையிலும் வழங்கப்படவில்லை என்பதையும்;

(ii) 1962.07.06 ஆம் திகதி தல்துவே சோமாராம தேரர் தூக்கிலிடப்பட்டு கொல்லப்பட்டதாக குறிப்பிடப்பட்டாலும், அத்திகதியில் அப்பெயரில் மரணமொன்று பதிவு செய்யப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(இ) (i) தல்துவே சோமாராம தேரரின் மரணச் சான்றிதழ் வழங்கப்படாமை தொடர்பாக விசாரணை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் தீர்மானம் யாதென்பதையும்;

(iii) இன்றேல், விசாரணையொன்று மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(iv) மரண தண்டனை நிறைவேற்றப்பட்டதன் பின்னர் மரணச் சான்றிதழ்கள் வழங்கப்படாத வேறு நபர்களும் உள்ளனரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

309/2024

கௌரவ ஹேஷா விதானகே,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) நாட்டின் நலன் கருதி சர்வதேச உறவுகள் மற்றும் கல்வி நிகழ்ச்சித்திட்டங் களுக்காக 2020.08.20 தொடக்கம் இன்று வரை ஒன்பதாவது பாராளுமன்றத்தின் சபாநாயகர் கலந்துகொண்ட உத்தியோகபூர்வ வெளிநாட்டு விஜயங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு விஜயங்களிலும் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர்களினதும் அலுவலர்களினதும் பெயர்கள் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு விஜயங்களின் மூலம் அடையப்பெற்ற நன்மைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

355/2024

கௌரவ கெவிந்து குமாரதுங்க,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) தற்போதைய மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் நியமிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) அத்திகதியிலும் 2024.01.31 ஆம் திகதியிலும் நுகர்வு வகுதி ஒவ்வொன்றிலும் மின்சார அலகு ஒன்றுக்கென அறவிடப்பட்ட கட்டணமும், அக்கட்டண அதிகரிப்பும் சதவீத அடிப்படையில் வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள திகதியிலும் 2024.01.31 ஆம் திகதியிலும்;

(ii) (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து 2024.01.31 ஆம் திகதி வரை சிவப்பு கட்டணப் பட்டியல் வழங்கப்பட்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட, மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) 2011.01.01 ஆம் திகதியிலிருந்து 2020.12.31 ஆம் திகதி வரை மின் இணைப்பை பெற்றுக்கொண்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அவற்றுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்தையும்;

(iii) (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள திகதியிலிருந்து 2024.01.31 ஆம் திகதி வரை மின் இணைப்பை பெற்றுக்கொண்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின்சார பாவனையாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) அவற்றுக்கு இடையில் காணப்படும் வித்தியாசத்தையும்;

(v) தற்போதைய அமைச்சரின் பதவிக் காலத்தில் மின் இணைப்பை பெற்றுக் கொண்ட மற்றும் மின் இணைப்பு துண்டிக்கப்பட்ட மின்சார பாவனையாளர் களின் எண்ணிக்கை, வருடாந்த சராசரி பெறுமானமாக யாதென்பதையும்;

அவர் மேலும் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

356/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் உள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை, சிங்கள மொழி மூல, தமிழ் மொழி மூல மற்றும் சிங்கள, தமிழ் மொழி மூல அடிப்படையிலும்;

(ii) அப்பாடசாலைகளில் கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை, 10 இற்குக் குறைந்த, 10-20 இடைப்பட்ட, 20-50 இடைப்பட்ட, 50-100 இடைப்பட்ட மற்றும் 100-200 இடைப்பட்ட எனும் வகைப்படுத்தலின் அடிப்படையிலும்;

(iii) அரசாங்கப் பாடசாலைகளுக்கு மத்தியில் க.பொ.த. உயர் தரத்திற்காக கணிதம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் பாடத்துறைகளில் கற்பித்தல் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் பாடசாலைகளின் எண்ணிக்கையும்;

(iv) க.பொ.த. (சா.த.) மற்றும் க.பொ.த. (உ.த.) பாடத்துறைகளை ஆங்கில மொழியில் கற்பிக்கும் அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கையும்;

ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவின் அடிப்படையில் வெவ்வேறாக யாதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

366/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை ‘அடையாளங் காணப்படாத’ சிறுநீரக நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களின் எண்ணிக்கை வருட வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(ii) சிறுநீரக நோயாளர்கள் அதிகளவில் பதிவாகின்ற மாவட்டங்களும் மேற்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் பதிவாகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iii) சிறுநீரக நோயாளர்கள் பதிவாகின்ற இதர மாவட்டங்களும் அவ்வொவ்வொரு மாவட்டத்திலும் பதிவாகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கையும் வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) சிறுநீரக நோயாளரொருவருக்கு அரசாங்கம் வழங்கும் மாதாந்த கொடுப்பனவு எவ்வளவென்பதையும்;

(ii) இன்றளவில் மேற்படி கொடுப்பனவுத் தொகையைப் பெறுகின்ற சிறுநீரக நோயாளர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2042/2023

கௌரவ லலித் எல்லாவல,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச சேவையிலிருந்து ஓய்வு பெற்றதன் பின்னர் அரச ஊழியர்களுக்குரிய மாதாந்த ஓய்வூதியம் செலுத்துவதை ஆரம்பிக்க சுமார் பத்து மாதங்களுக்கும் அதிகமான காலம் எடுக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) இத்தாமதம் காரணமாக சில அரச ஊழியர்கள் தமது முதலாவது ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு முன்னர் மரணிக்கும் சந்தர்ப்பங்களும் காணப்படுகின்றன என்பதையும்;

(iii) மேற்படி தாமதமானது அரச ஊழியர்களுக்கு இழைக்கப்படும் பாரிய அநீதியாகும் என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) மேற்படி தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) குறித்த தாமதத்தைத் தடுப்பதற்காக இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி தாமதத்தைத் தடுப்பதற்கு முறையான வேலைத்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2055/2023

கௌரவ வேலு குமார்,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) யுனெஸ்கோ அமைப்பினால் கண்டி நகரம் உலக மரபுரிமை நகரமாக அறிவிக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) இலங்கைக்கு வரலாற்று ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த பல இடங்கள் மேற்படி நகரில் அமைந்துள்ளதென்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்கின்றாரா?

(ஆ) (i) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள புனித இடங்களும் கட்டடங்களும் யாவை என்பதையும்;

(ii) அவற்றைப் பாதுகாப்பதற்கு யுனெஸ்கோ அமைப்பு நிதி உதவி அளிக்கின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், அளிக்கப்படுகின்ற வருடாந்த நிதி உதவி எவ்வளவென்பதையும்;

(iv) கண்டி நகரில் அமைந்துள்ள உலக மரபுரிமைகளாக அடையாளங் காணப்பட்டுள்ள தனியார் கட்டடங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி கட்டடங்களின் உரிமையாளர்களுக்கும் யாதேனும் நிதி உதவி வழங்கப்படுமா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி நிதி உதவி எவ்வளவென்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேற்படி (ஆ) (i) இல் குறிப்பிடப்பட்ட இடங்கள் உள்ளபடியே பேணப்படுமா என்பதையும்;

(ii) அவற்றில் மாற்றங்கள் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) கண்டி நகரை உலக மரபுரிமை நகரமாக பேணிச் செல்வதற்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவை என்பதையும்;

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2073/2024

கௌரவ துஷார இந்துனில் அமரசேன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பொதுப்பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் மின் கட்டண குறைப்பு சம்பந்தமாக வெளியிடப்பட்டுள்ள விதப்புரைகள்/ ஒழுங்குவிதிகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய விதப்புரைகள் / ஒழுங்கு விதிகள் யாவை என்பதையும்;

(iii) சிவில் அமைப்புகள், மின் கட்டண குறைப்பு தர்க்க ரீதியற்றது எனவும் அதன்போது மக்களின் கருத்துகளுக்கு செவிசாய்க்கவில்லை எனவும் குற்றஞ் சுமத்தியுள்ளன என்பதை அறிவாரா;

(iv) அவ்வாறாயின், அத்தகைய குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக எடுக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2081/2023

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் தற்போது மதுபானம் உற்பத்தி செய்கின்ற சட்டரீதியான நிறுவனங்களின் எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்தினது பெயரும் முகவரியும், உரிமையாளரின் பெயரும் முகவரியும் வெவ்வேறாக யாவை;

(iii) 2020 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை மேற் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு நிறுவனத்தினாலும் செலுத்தப்பட்டுள்ள வரித் தொகை ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(iv) மேற்படி நிறுவனங்களினால் செலுத்தப்பட வேண்டியுள்ள நிலுவை வரி உள்ளதா;

(v) ஆமெனில், அவ்வரித் தொகையை அறவிடுவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

## 2024 மே 08, புதன்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

371/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை அரசாங்கம், லஸாட் - பிரான்ஸ் கம்பனியிடம் (M/S Lazards-France) நிதி ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கை ஒன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை அரசாங்கம் கிளிபர்ட் சான்ஸ் (M/S Clifford Chance LLP) கம்பனியிடம் சட்ட ஆலோசனைச் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடன்படிக்கையொன்றை ஏற்படுத்திக்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) குறித்த உடன்படிக்கைக்கு அமைவாக மேற்படி கம்பனியின் அடிப்படை பொறுப்புகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி உடன்படிக்கைக்கு அமைவாக இலங்கை அரசாங்கம் செலுத்த வேண்டிய பணத்தொகையும் இன்றளவில் செலுத்தியுள்ள பணத்தொகையும் இலங்கை ரூபா மற்றும் ஐக்கிய அமெரிக்க டொலர்களின் அடிப்படையில் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

378/2024

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் தேறிய சொத்துக்களின் பெறுமதி யாது என்பதையும்;

(ii) 2018 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மேற்படி கூட்டுத்தாபனத்தின் இலாபம்/ நட்டம் ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி கூட்டுத்தாபனம் நட்டத்தில் இயங்குமாயின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி நட்டத்தை தவிர்த்துக் கொள்வதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நிலுவைத் தொகைகளை செலுத்த வேண்டியுள்ள நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு நிறுவனத்திடமிருந்தும் கிடைக்க வேண்டியுள்ள நிலுவைத் தொகை தனித்தனியே யாது என்பதையும்;

(iii) மேற்படி நிலுவைத் தொகைகளை அறவிட்டுக்கொள்வதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

464/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் இதுவரை, வன பாதுகாப்புத் திணைக்களத்திற்கு உரித்தான காணிகளில் காணப்படுகின்ற கருங்கற்களை உடைத்து அகற்றுவதற்கு அனுமதி வழங்கும் கட்டணமாக, வனப் பாதுகாப்புத் திணைக்களத்தினால் ஈட்டப்பட்ட வருமானம் ஒவ்வொரு வருட ரீதியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(ii) கருங்கற்களை உடைத்து அகற்றும் கட்டணத்தை 50%இனால் குறைப்பதற்கு தீர்மானிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) கட்டணத்தை குறைப்பதில் தாக்கம் செலுத்திய காரணிகள் யாவை என்பதையும்;

(iv) இதன் காரணமாக வன பாதுகாப்புத் திணைக்களம் இழந்துள்ள தொகை மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானம் அமுல்படுத்தப்பட்ட திகதி முதல் இதுவரை ஒவ்வொரு வருடத்தின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

(v) மேலே (ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள தீர்மானத்தை நியாயப்படுத்துவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

509/2024

கௌரவ ரோஹண பண்டார,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இலங்கை கல்வி நிர்வாக சேவைக்கு திறந்த மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சைகளின் கீழ் ஆட்சேர்க்கப்பட்டுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் அமைவாக;

(ii) மேற்படி ஒவ்வொரு அலுவலரினதும் பெயர், முகவரி மற்றும் தற்போதைய சேவை நிலையம்;

(iii) மேற்கூறப்பட்ட அலுவலர்கள் மத்தியில் 2018 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை இடமாற்றத்திற்காக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்துள்ள அலுவலர்களின் எண்ணிக்கை, அவ்வொவ்வொரு அலுவலரினதும் பெயர், முகவரி மற்றும் சேவை நிலையம்;

(iv) மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்ட அலுவலர்கள் மத்தியில் இதுவரை இடமாற்றம் பெற்றுள்ள மற்றும் இடமாற்றம் பெறாதுள்ள அலுவலர்களின் எண்ணிக்கை, அவ்வொவ்வொரு அலுவலரினதும் பெயர் மற்றும் சேவை நிலையம்;

வெவ்வேறாக யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இலங்கை அதிபர் சேவை, இலங்கை ஆசிரியர் சேவை ஆகிய சேவைகளில் போன்று நியாயமான இடமாற்றக் கொள்கையொன்றினை இலங்கை கல்வி நிர்வாக சேவையின் நிமித்தமும் நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1242/2024

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் தாபிக்கப்பட்டுள்ள பொலிஸ் நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பொலிஸ் நிலையங்களுக்கும் வேறு கடமைகளுக்காகவும் ஈடுபடுத்தப்பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே யாதென்பதையும்;

(iii) தற்போது இலங்கை பொலிஸ் சேவையில் வெற்றிடங்கள் நிலவுமாயின், அவ்வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவியின் அடிப்படையில் தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரத்தியேக பாதுகாப்புக்காக ஈடுபடுத்தப் பட்டுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) பாராளுமன்ற உறுப்பினர்கள் தவிர வேறு நபர்கள் அல்லது நிறுவனங்களின் பாதுகாப்புக்காக பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளனரா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி எண்ணிக்கையானது ஒவ்வொரு நபர்/நிறுவனத்திற்கு ஏற்ப தனித்தனியே யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

## 2024 மே 09, வியாழக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

540/2024

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையிலுள்ள திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அவற்றில், தற்போது திரைப்படங்கள் திரையிடப்படுகின்ற திரையரங்குகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தால் திரையிடப்பட்டுள்ள திரைப்படங்களின் எண்ணிக்கை ஆண்டுவாரியாக தனித்தனியாக யாதென்பதையும்;

(iv) 2019 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை திரைப்படங்களைத் தயாரிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள கடன் தொகை ஆண்டுவாரியாக தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

563/2024

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளின் அளவு எத்தனை ஹெக்டேயர்கள் என்பதையும்;

(ii) மேற்படி காணிகளில் பயிரிடப்பட்டுள்ள பயிர் வகைகள் யாவை என்பதையும்;

(iii) கூட்டுத்தாபனத்திற்குச் சொந்தமான காணிகளுள் குறுகிய கால பயிர்ச்செய்கை நடவடிக்கைகளுக்காக குத்தகை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாதென்பதையும்;

(iv) மேற்படி காணிகள் அமைந்துள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்,

(v) மேற்படி காணிகளை குத்தகைக்கு வழங்கியதன் மூலம் இதுவரை ஈட்டப்பட்டுள்ள வருமானம் எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

589/2024

கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2022.12.31 ஆம் திகதியில் காணப்பட்ட இலங்கையின் ஒட்டுமொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு அமைச்சு/திணைக்களத்தின் பிரகாரம் தனித்தனியே யாது என்பதையும்;

(ii) 2019.01.01 முதல் 2019.12.31 வரை ஓய்வுறுத்தப்பட்ட அரச ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2020 முதல் 2022 வரை ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட மற்றும் ஓய்வுறுத்தப்பட்ட அரச ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே யாது என்பதையும்;

(iv) 2023.01.01 ஆம் திகதியில் காணப்பட்ட ஒட்டுமொத்த அரச ஊழியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது அரச சேவையில் அதிகளவான வெற்றிடங்கள் காணப்படுகின்றன என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி வெற்றிடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) கடந்த காலத்தில் ஏற்பட்ட வெற்றிடங்கள் நிரப்பப்படாமை காரணமாக அரச சேவையில் வீழ்ச்சி ஏற்பட்டது என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) மேற்படி வீழ்ச்சியை தவிர்த்துக் கொண்டு அரச சேவையை வினைத்திறனுடன் பேணிவருவதற்காக தயாரிக்கப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

613/2024

கௌரவ ஜயந்த சமரவீர,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023.01.01 ஆம் திகதியளவில் மதுவரித் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) நாட்டில் தற்போது காணப்படுகின்ற மதுபான உரிமங்களின் வகைகள் யாவை என்பதையும்;

(iii) அவ்வொவ்வொரு மதுபான உரிம வகைக்கும் வழங்கப்பட்டுள்ள உரிமங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது என்பதையும்;

(iv) 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் 2024.01.01 ஆம் திகதி வரை வழங்கப்பட்டுள்ள மதுபான உரிமங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(v) அந்த எண்ணிக்கையானது இன்றளவில் வழங்கப்பட்டுள்ள மொத்த உரிமங்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்;

(vi) அந்தச் சதவீதமானது ஒவ்வொரு மதுபான உரிம வகைக்கமைய வெவ்வேறாக யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மதுபானங்களை எளிதில் பெறக்கூடிய நிலை காணப்படுதலே மதுபான நுகர்வு அதிகரிப்பதற்கான பிரதான காரணம் என்பதையும்;

(ii) அதனால், மதுபாவனை சார்ந்த நோய்கள் அதிகரிப்பதால் சுகாதாரத்திற்காக ஒதுக்க வேண்டிய நிதி அதிகரிக்கின்றது என்பதையும்;

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(இ) இன்றேல், ஏன்?

637/2024

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் மூடப்பட்டுள்ள அரசாங்கப் பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அத்தகைய பாடசாலைகளில் காணப்படுகின்ற காணிகளையும் கட்டடங்களையும் பயனுறுதிவாய்ந்த நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்த எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2023ஆம் ஆண்டில் கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கை மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அம்மாணவர்களுக்காக ஓராண்டில் செலவிட வேண்டியிருக்கும் அந்நியச் செலாவணி அளவு யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தற்போது ஆசிரியர் சேவையில் உள்ளீர்க்கப்பட்டுள்ள அபிவிருத்தி அலுவலர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) தற்போது காணப்படுகின்ற அதிபர்களுக்கான பற்றாக்குறையை நிவர்த்திசெய்ய எடுக்கப்பட்டிருக்கும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

1091/2024

கௌரவ சமன்பிரிய ஹேரத்,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை புகையிரதங்களில் மோதி இறந்துள்ள காட்டு யானைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) புகையிரதங்களில் காட்டு யானைகள் மோதுவதைத் தடுப்பதற்கு முறையான பொறிமுறையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) இது தொடர்பாக இலங்கை புகையிரத திணைக்களமும், வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களமும் இணைந்து கூட்டு வேலைத்திட்டமொன்றினை நடைமுறைப்படுத்துகின்றனவா என்பதையும்;

(iv) புகையிரதங்களில் காட்டு யானைகள் மோதுவதைத் தடுப்பதற்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்தினால் எதிர்காலத்தில் கடைபிடிக்கப்படவுள்ள வழிமுறை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1127/2024

கௌரவ டீ. வீரசிங்க,— கடற்றொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மின்சாரக் கட்டணம் அதிகரிக்கப்பட்டதால் அலங்கார மீன் ஏற்றுமதியாளர்கள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி இருப்பதை அறிவாரா என்பதையும்;

(ii) இலங்கையில் இருக்கின்ற அலங்கார மீன் ஏற்றுமதியாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iii) 2019ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை அலங்கார மீன் ஏற்றுமதி மூலம் ஈட்டப்பட்ட வருமானம் ஒவ்வோராண்டு வாரியாக தனித் தனியாக யாது என்பதையும்;

(iv) அலங்கார மீன் வளர்ப்புத் தொழிற்றுறையை பாதுகாக்க நடைமுறைப்படுத்தியுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1148/2024

கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023.01.01 ஆம் திகதியிலிருந்து இதுவரை வேலைவாய்ப்புகளுக்காக வெளிநாடு சென்றுள்ள இலங்கையர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையானது அவர்கள் பணியாற்றும் நாடுகளுக்கமைவாக தனித்தனியாக எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக எதிர்காலத்திலும் இலங்கையர்களை அனுப்புவதற்கான சந்தர்ப்பம் கிடைத்துள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்நாடுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக இலங்கையர்களை அனுப்புவதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1153/2024

கௌரவ சட்டத்தரணி மதுர விதானகே,— புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மத்திய கலாசார நிதியத்தினால் நிர்வகிக்கப்படுகின்ற தொல்லியல் தளங்களின் எண்ணிக்கை யாது;

(ii) உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மேற்படி தளங்களில் முறையான துப்பரவேற்பாட்டு வசதிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(iii) தொல்லியல் தளங்களுக்கு சுற்றுலாப் பயணிகளைக் கவரும் வகையில் மத்திய கலாசார நிதியத்தினூடாக இன்றளவில் செயற்படுத்தி வருகின்ற வேலைத்திட்டம் யாது;

(iv) தொல்லியல் தளங்களில் சட்டவிரோத கட்டுமானங்களை அகற்றுவதற்கும் புதிய கட்டுமானங்களைத் தடுப்பதற்கும் முறையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) தொல்லியல் தளங்களைக் காட்டும் உத்தியோகபூர்வ இணையத்தளம் இற்றைப்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) அவ்வாறெனில், எவ்வளவு காலத்திற்கொரு தடவை இற்றைப்படுத்தல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1250/2024

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் கடந்த சில வருடங்களாக அதிகரித்துவரும் வாழ்க்கைச் செலவுக்கு ஈடாக தேயிலைத்தோட்டத் தொழிலாளர்களின் நாள் சம்பளத்தினை அதிகரிப்பது தொடர்பான முன்னேற்றத்தினையும்;

(ii) முன்னேற்றம் இருப்பின், சம்பளம் அதிகரிக்கப்பட்ட தொகையினையும்;

(iii) மேற்குறிப்பிட்ட அதிகரிப்பு செலுத்தப்படவுள்ள திகதியினையும்;

(iv) முன்னேற்றம் இல்லையெனில், அமைச்சர் எதிர்நோக்கும் தடைகளையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

## 2024 மே 10, வெள்ளிக்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1253/2024

கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன,— சுற்றாடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை புவிச்சரிதவியல் அளவை மற்றும் சுரங்கப் பணியகத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அனுமதிப் பத்திரங்களை வழங்கும் போது அப்பணியகம் பின்பற்றும் முறையியல் யாதென்பதையும்;

(iii) அனுமதிப் பத்திரம் வழங்கும்போது அச்செயன்முறையின் சுயாதீனத் தன்மைக்கு அழுத்தம் விடுக்கப்படுவதாக பாராளுமன்றத்தின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுக் கூட்டத்தின் போது தெரிய வந்துள்ளமையினை அறிவாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அனுமதிப் பத்திரம் வழங்கும் செயன்முறையின் சுயாதீனத் தன்மையைப் பாதுகாப்பதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(v) இன்றளவில் ஊழல் நிறைந்த நிறுவனமாக மாறியுள்ள மேற்படி நிறுவனத்தை, அந்நிலையிலிருந்து மீட்டெடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1282/2024

கௌரவ அசங்க நவரத்ன,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வன விலங்குகளின் செயற்பாடுகள் காரணமாக பயிர்ச் செய்கைகளுக்கு வருடாந்தம் ஏற்படுகின்ற சேதங்கள் தொடர்பில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி சேதங்களைக் குறைப்பதற்கு இன்றளவில் மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1287/2024

கௌரவ கிங்ஸ் நெல்சன்,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 'சிரம வாசனா நிதியம்' ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) அது ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கங்கள் யாவையென்பதையும்;

(iii) 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை மேற்படி நிதியத்தின் மூலமாகப் பயனடைந்த நபர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி நிதியத்திற்கு நிதி கிடைக்கப்பெறும் வழிமுறைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி நிதியத்தினை மேலும் வலுப்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1701/2024

கௌரவ எஸ்.எம்.மரிக்கார்,— பிரதம அமைச்சர் மற்றும் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வீடுகளில் நிகழும் இயற்கை மரணங்களைப் பதிவு செய்கையில், மரணம் நிகழும் பிரிவின் கிராம உத்தியோகத்தர் மற்றும் பதிவாளரது பணிப் பொறுப்புகள் வெவ்வேறாக யாவை;

(ii) இயற்கை மரணமொன்றின்போது, மரணமடைந்த நபரின் மரணத்துக்கான காரணத்தை உறுதிப்படுத்தும் சட்டரீதியான முறையியல் யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1703/2024

கௌரவ கே.பீ.எஸ். குமாரசிறி,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் அரச பாடசாலைகளில் கடமையாற்றும் கல்விசாரா ஊழியர்களின் எண்ணிக்கை யாது;

(ii) அவர்களின் பதவிப் பெயர்கள் யாவை;

(iii) திட்டவட்டமான கடமைப் பட்டியல் மூலம் அவர்களுக்கு கடமைகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளனவா;

(iv) மேற்படி ஊழியர்களுக்கு பதவி உயர்வு வழங்குவதற்கான நடவடிக்கை முறையொன்று உள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி ஊழியர்களில் தற்போது பட்டப் படிப்பை பூர்த்தி செய்துள்ள ஊழியர்கள் தொடர்பில் மேற்கொள்ளும் நடவடிக்கை யாது;

(ii) பட்டம் மற்றும் அனுபவம் என்பவற்றைக் கவனத்தில் கொண்டு அவர்களை ஆசிரியர் சேவைக்கு ஆட்சேர்ப்புச் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா;

என்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1728/2024

கௌரவ ஜகத் பிரியங்கர,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்திலுள்ள கல்விக் கோட்டங்களின் எண்ணிக்கை எத்தனை;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி ஒவ்வொரு கல்விக் கோட்டங்களிலுமுள்ள தேசிய பாடசாலைகளினதும் மாகாண சபை பாடசாலைகளினதும் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் வெவ்வேறாக யாவை;

(iv) மேற்படி ஒவ்வொரு கல்விக் கோட்டங்களிலும் காணப்படுகின்ற ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பாடத்தின் அடிப்படையில் வெவ்வேறாக யாது;

(v) மேற்படி ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்புவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1738/2024

கௌரவ இம்ரான் மஹ்ரூப்,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள காணிகள் அண்மைக்காலமாக அரசாங்கத்தினால் சுவீகரிக்கப்பட்டு வருகின்றன என்பதையும்;

(ii) இலங்கை நில அளவைத் திணைக்களம் திருகோணமலை மாவட்டத்தின் இறக்கக்கண்டி, புல்மோட்டை, கிண்ணியா, மூதூர் மற்றும் தோப்பூர் ஆகிய பிரதேசங்களிலுள்ள காணிகளை அவற்றின் உரிமையாளர்களின் அனுமதியின்றி அளவீடு செய்து வருகின்றது என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி அளவீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான காரணம் யாதென்பதையும்;

(ii) மேற்கூறப்பட்ட வகையில் காணிகளைச் சுவீகரிப்பதானது அக்காணிகளில் பரம்பரை பரம்பரையாக விவசாய நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்ற விவசாயிகளின் சீவனோபாயத்திற்குப் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்தும் என்பதனை அறிவாரா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

1750/2024

கௌரவ இஷாக் ரஹுமான்,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மன்னார் காற்றாலை மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(ii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தினை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி மின் உற்பத்தி நிலையத்திலிருந்து தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மின்சாரத்தின் அளவு மெகா வொட்களில் எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையத்தின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கப்படும் திகதி யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1877/2024

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன,— வனசீவராசிகள் மற்றும் வன வளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொரகஹகந்த கருத்திட்டத்தினால் மாத்தளை மாவட்டத்தில் மேற்படி கருத்திட்டத்தை அண்டியதாக அமைந்துள்ள பல்வேறு கிராமங்களைச் சேர்ந்த மக்கள் காட்டு யானைகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளார்கள் என்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி கிராமங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) அக் கிராமங்களில் வசிக்கின்ற, இன்றளவில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை ஒவ்வொரு கிராமம் வாரியாக வெவ்வேறாக எத்தனையென்பதையும்;

(iv) மேற்படி காட்டு யானைகளின் அச்சுறுத்தலுக்கு தீர்வு காண்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1909/2024

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இரத்மலானை டிப்போவினால் தொழிற்பாட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட கல்கிஸ்ஸை பிரதான பேருந்து தரிப்பிடத்தை, அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்கு தாக்கம் செலுத்திய காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி பிரதான பேருந்து தரிப்பிடத்தை நிறுவுவதற்கு கையகப்படுத்தப்பட்ட காணியின் ஆரம்ப உரிமையாளரின் பெயர் மற்றும் நில வரைபட இலக்கம் யாவையென்பதையும்;

(iii) மேற்படி காணியின் விஸ்தீரணம் யாதென்பதையும்;

(iv) மேற்படி பிரதான பேருந்து தரிப்பிடத்தை நிறுவுவதற்குப் பயன்படுத்திய காணியின் அளவு யாதென்பதையும்;

(v) பிரதான பேருந்து தரிப்பிடத்தை நிறுவுவதற்கு மேற்படி காணியை கையகப்படுத்திய வருடம் யாதென்பதையும்;

(vi) தற்போது அக்காணி எந்த நிறுவனத்திற்கு உரித்தானது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.30/2024

கௌரவ வேலு குமார்,— தோட்டப் பிரதேசங்களில் விளையாட்டுத்துறையை விருத்தி செய்தல்,— தோட்டப் பிரதேசங்களில் வாழும் இளைஞர், யுவதிகள் விளையாட்டுத் துறையில் தேசிய மற்றும் சர்வதேச மட்டத்தில் தமது திறமைகளை வெளிப்படுத்தியிருப்பதனாலும், அவர்கள் கல்வி பயிலும் தோட்டத்துறைப் பாடசாலைகள் மற்றும் வாழும் தோட்டப் பிரதேசங்களிலும் விளையாட்டுத்துறைக்கு எந்தவொரு வசதியும் இல்லாமையினாலும், நாட்டின் விளையாட்டுத்துறையை அபிவிருத்தி செய்வதற்கு தோட்டப் பிரதேசங்களைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்வதற்காக பிரதேசத்திற்குரிய விளையாட்டு அபிவிருத்திக்கான வேலைத்திட்டம் ஒன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.31/2024

கௌரவ வேலு குமார்,— மலையக தோட்டப்புறப் பிரதேசங்களில் கிரிக்கட் விளையாட்டை மேம்படுத்தல்,— இலங்கை கிரிக்கட் விளையாட்டின் மூலம் சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுள்ள நாடாக இருப்பதனாலும், கடந்த காலங்கள் முழுவதிலும் கிரிக்கட் அணியின் செயற்பாடுகள் நிலையற்றதாகக் காணப்பட்டதனாலும், மிகச் சிறந்த வீரர்கள் பலர் இருக்கின்ற தோட்டப்புறப் பிரதேசங்களிலும் கிரிக்கட் விளையாட்டை பயிற்சி பெறுவதற்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுப்பதன் மூலம் அவர்களின் பங்களிப்பையும் இலங்கை கிரிக்கட் விளையாட்டின் முன்னேற்றத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான விசேட வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.32/2024

கௌரவ வேலு குமார்,— மலையக சமுதாயத்தின் பாரம்பரிய கலைநுட்பங்களை வணிக மட்டத்திற்குக் கொண்டுவருதல்,— பெருந்தோட்டத் துறையினை மையமாகக் கொண்ட இந்திய வம்சாவளி மலையக சமுதாயம், இலங்கையின் ஒட்டுமொத்த மக்கள் சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு பிரிவினர் என்பதாலும், கூத்துக்கள், கரகாட்டம், காவடியாட்டம், கோலாட்டம் போன்ற பாரம்பரிய கலைநுட்பங்கள் இச்சமூகத்தில் காணப்படுவதாலும், குறிப்பிட்ட கலைநுட்பங்களைப் பாதுகாத்து வணிக மட்டத்திற்குக் கொண்டு வருவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றுக்கொடுப்பதற்கு அரசாங்கம் பொருத்தமான மத்திய நிலையமொன்றைத் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.33/2024

கௌரவ வேலு குமார்,— பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்களுக்கான தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துதல்,— நாட்டின் பெரும்பாலான பகுதிகளில் தனிப்பட்ட தரப்பினர்களால் பகல் நேர சிறுவர் பராமரிப்பு நிலையங்கள் பேணப்பட்டு வருவதாலும், பெருந்தோட்டக் கம்பனிகளால் பேணப்பட்டுவரும் இத்தகைய நிலையங்களில் உரிய தரநியமங்களோ, ஒழுங்குமுறைகளோ பின்பற்றப்படுகின்றமை கண்காணிக்கப்படுவதில்லையென்பதாலும், நாட்டின் எதிர்காலத்தை தீர்மானிக்கக்கூடிய பிள்ளைகளின் பாதுகாப்பு மற்றும் நலநோம்புகையினை நோக்காகக் கொண்டு குறித்த நிலையங்களில் உரிய தரநியமங்களையும் ஒழுங்குமுறைகளையும் ஏற்படுத்துவதற்காக அரசாங்கம் பொருத்தமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.34/2024

கௌரவ வேலு குமார்,— மத்திய மாகாணத்தில் வனச் செய்கையை விருத்தி செய்தல்,— இலங்கையிலுள்ள அநேகமான நீரேந்தும் பிரதேசங்கள் மத்திய மலை நாட்டின் வலயங்களில் குறிப்பாக கண்டி மற்றும் மாத்தளை மாவட்டங்களில் அமைந்துள்ளதாலும், அத்தகைய நீரேந்தும் பிரதேசங்கள் பயினஸ் செய்கை காரணமாக கடுமையான பாதிப்புக்கு இலக்காகி உள்ளதாலும், வனச் செய்கைக்காக பயினஸ் மரங்கள் நாட்டப்படுவதை முழுமையாக நிறுத்த வேண்டியுள்ளதாலும், அவற்றை அகற்றி அதற்கு மாற்றீடாக இயற்கை வனச் செய்கை முறையை நடைமுறைப்படுத்த அரசாங்கம் தகுந்த நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.35/2024

கௌரவ வேலு குமார்,— மலைநாட்டு தோட்ட மக்களுக்கு குடிநீர் வழங்கல்,— மலைநாட்டில் தோட்டங்களைச் சார்ந்துள்ள பிரதேசங்களில் குடிநீர் வழங்கும் திட்டங்கள் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்படாத காரணத்தினால் அந்த மக்களின் குடிநீர்த் தேவை இயற்கை நீர் ஊற்றுக்கள், ஆறுகள், ஓடைகள் மற்றும் கிணறுகள் மூலம் பூர்த்தி செய்யப்படுவதாலும், தற்போதைய சனத்தொகை அதிகரிப்பு மற்றும் விவசாய இரசாயனப் பதார்த்தங்களின் மிகையான பயன்பாடு காரணமாக பயன்பாட்டுக்கு உகந்த நீரைப் பெற்றுக்கொள்ள முடியாத நிலை உருவாகியுள்ளதால், அந்த மக்கள் பல்வேறு சுகாதாரப் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளதாலும், தோட்டப் பிரதேசங்களில் காணப்படுகின்ற நீரை வெளிப் பிரதேசங்களுக்குக் கொண்டு செல்வதன் காரணமாக நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதாலும், நாட்டின் ஏனைய பாகங்களில் நடைமுறைப்படுத்தப்படுகின்ற குடிநீர் வழங்கல் திட்டங்களை இப்பிரதேசங்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டியதன் தேவை குறித்து கவனம் செலுத்தி அரசாங்கத்தின் குடிநீர் வழங்கல் வேலைத்திட்டத்தில் தோட்டப் பிரதேசங்களையும் உள்வாங்கத் தேவையான நடவடிக்கையை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.36/2024

கௌரவ வேலு குமார்,— தோட்டங்கள் சார்ந்து காணப்படுகின்ற வீதிகளை அரசாங்கத்திற்குச் சுவீகரித்தல்,— இலங்கையில் பெருந்தோட்டத்துறைக்கு முக்கியமான இடம் வழங்கப்படுகின்றதோடு, தோட்டங்களின் உரிமை, முகாமைத்துவம் மற்றும் நிருவாகம் பல்வேறு காலக் கட்டங்களில் மாற்றங்களுக்குள்ளாகி வருவதாலும், தோட்டத் தொழிலாளர்களின் வாழ்விடங்கள் பிரதான வீதியிலிருந்து நீண்ட தூரத்தில் தோட்டங்களின் நடுவில் அமைந்துள்ளதாலும், இம்மக்கள் பயன்படுத்தும் தோட்ட வீதிகள் அபிவிருத்தி செய்யப்படாது மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதாலும் இந்த வீதிகளை உள்ளூராட்சி மாகாண சபை வீதிகளின் கீழ் கொண்டு வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.37/2024

கௌரவ வேலு குமார்,— மலையகத் தொழிற்சங்க தியாகிகள் தினமொன்றைப் பிரகடனப்படுத்தல்,— இலங்கையின் வரலாற்றில் பொருளாதாரத்திற்கு பெருமளவு பங்களிப்புச் செய்துள்ள சமூகமாக மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் காணப்படுவதாலும், மலையகப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் ஜனநாயக வழியில் போராடியே தமது உரிமைகளை வென்றெடுத்தனரென்பதாலும், அத்தகைய ஜனநாயக உரிமைப் போராட்டங்களில் உயிர்நீத்த தொழிற்சங்க தியாகிகளைப் பொதுவானதொரு நாளில் நினைவுகூரவேண்டுமென்பது இலங்கைவாழ் இந்தியா வம்சாவழி மலையக மக்களின் நெடுநாள் கோரிக்கையாக இருப்பதாலும், 1939 ஆம் ஆண்டு டிசம்பர் முதல் 1940 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் வரை சம்பள உயர்வு கோரி இலங்கையில் இடம்பெற்ற பெருந்தோட்டத் தொழிலாளர்களின் முதலாவது தொழிற்சங்கப் போராட்டத்தின் போது வெள்ளையரின் துப்பாக்கிச் சூட்டில் "முல்லோயா கோவிந்தன்" என்ற தொழிலாளர் ஒருவர் உயிர்நீத்துள்ளதாலும், இலங்கையின் பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அறவழிப் போராட்டத்தில் உயிர்நீத்த முதலாவது தொழிலாளியையும் மற்றும் அதன்பின் இடம்பெற்ற பல தொழிற்சங்கப் போராட்டங்களில் மலையப் பெருந்தோட்ட மக்களின் உரிமைக்காகவும் நலனுக்காகவும் போராடி உயிர்நீத்த ஏனையோரையும் நினைவுகூரும் வகையில், முதலாவது மலையகத் தொழிற்சங்கத் தியாகி உயிர்நீத்த தினமாகிய ஜனவரி 10 ஆம் திகதியை மலையகத் தொழிற்சங்கத் தியாகிகள் தினமாக பிரகடனப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.38/2024

கௌரவ வேலு குமார்,— இலங்கையின் தபால் சேவையை பெருந்தோட்டப் பகுதிகளில் முறைமைப்படுத்தல்,— 1798 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, 1882 ஆம் ஆண்டு ஆங்கிலேயரால் முறைமைப்படுத்தப்பட்ட இருநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாறு கொண்ட இலங்கை தபால் சேவையானது தொடர்ந்தும் சுதந்திரத்திற்குப் பின்னர் அரச சேவைகளை வழங்கும் நிறுவனங்களின் பிரதான சேவைகளில் ஒன்றாக தபால் சேவை தபால் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்பட்டு வருவதாலும், மலையகப் பெருந்தோட்ட மக்கள் இலங்கையில் குடியேறி இருநூறு வருடங்கள் ஆகிவிட்டபோதிலும், இன்றும் அவர்கள் வாழுகின்ற குடியிருப்புகளுக்கு நேரடியாக தபால்கள் சென்றடைவதற்கான வசதிகள் இல்லாதிருப்பதாலும், இச்சூழல் காரணமாக பல்வேறு அசாதாரணங்கள் மற்றும் அசௌகரியங்களுக்கு அம்மக்கள் உள்ளாவதாலும், இது ஒருவகையில் அரச சேவையில் இருந்து ஒதுக்கி வைக்கப்படுகின்ற நிலையாக காணப்படுவதாலும், இருநூறு வருடங்களைக் கிட்டியுள்ள பெருந்தோட்டத்துறை மக்களுக்கான தபால் சேவையை முறைமைப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

---

## 2024 மே 13, திங்கட்கிழமை

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1912/2024

கௌரவ சட்டத்தரணி பிரேம்நாத் சி. தொலவத்த,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2010 முதல் 2022 வரை கண்டி பல்லேகல சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் நடாத்தப்பட்டுள்ள சர்வதேச கிரிக்கெட் விளையாட்டுப் போட்டிகளின் எண்ணிக்கை ஆண்டு வாரியாக தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு போட்டியிலிருந்தும் ஈட்டப்பட்டுள்ள வருமானம் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) 2010 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரை மேற்படி மைதானத்தின் பராமரிப்புக்காக செலவிடப்பட்ட தொகை ஆண்டுவாரியாக தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி மைதானத்தின் பராமரிப்பு நடவடிக்கைகள் இலங்கை கிரிக்கெட் நிறுவனத்தால் மேற்கொள்ளப்படுகின்றனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1917/2024

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ,— தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இது வரை தொழில் பிணக்குகள் தொடர்பில் தொழில் திணைக்களத்திற்குக் கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி முறைப்பாடுகளில் இன்றளவில் தீர்க்கப்பட்டுள்ள மற்றும் தீர்க்கப்படாதுள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை தனித்தனியாக எத்தனையென்பதையும்;

(iii) தொழில் நட்டஈட்டு ஆணையாளர் அலுவலகம் மூலமாக நட்டஈடு வழங்கப்பட்டுள்ள ஆட்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1940/2024

கௌரவ மிலான் ஜயதிலக்க,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய லொத்தர் சபையைச் சேர்ந்த விற்பனை முகவர்களின் எண்ணிக்கை யாது;

(ii) 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரை இலங்கையில் மாவட்ட மட்டத்தில் விற்பனை செய்யப்பட்டுள்ள மேற்படி சபையின் லொத்தர்களின் எண்ணிக்கை மற்றும் அதன் மூலம் ஈட்டப்பட்டுள்ள வருமானம் ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு;

(iii) 2019 ஆம் ஆண்டு முதல் இதுவரை மேற்படி வருமானத்திலிருந்து சனாதிபதி நிதியத்திற்கும், மஹபொல புலமைப் பரிசில் நிதியத்திற்கும், திறைசேரிக்கும் வேறு நலன்புரி நடவடிக்கைகளுக்கும் வழங்கப்பட்டுள்ள தொகை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1968/2024

கௌரவ யூ.கே.சுமித் உடுகும்புர,— வெகுசன ஊடக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது இலங்கையிலுள்ள தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளும் வெவ்வேறாக யாவை;

(ii) இலங்கையின் தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளில் உரிமப்பத்திரமின்றி இயங்கும் தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகள் உள்ளனவா;

(iii) ஆமெனில், அது தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iv) புதிய தொலைக்காட்சி மற்றும் வானொலி அலைவரிசைகளை ஆரம்பிப்பதற்கு விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றுள்ளனவா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1994/2024

கௌரவ வாசுதேவ நாணாயக்கார,— நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2023ஆம் ஆண்டின் முதலாவது காலாண்டில் இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் மஹரகம மற்றும் ஹிரிபிடிய கிளைகளில் பாரிய நிதி கையாடல் இடம்பெற்றுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், கையாடப்பட்ட நிதி எவ்வளவு என்பதையும்;

(iii) இது தொடர்பில் சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு ஒரு வாரமோ அல்லது இரண்டு வாரங்களோ தாமதமடைவதற்கு அலுவலர்களின் தீயெண்ணம் காரணமாக அமைந்துள்ளதா என்பதையும்;

(iv) இந்த நிதி கையாடலுடன் தொடர்புடைய அலுவலர்கள் யாவர் என்பதையும்;

(v) அவ்வலுவலர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(vi) கையாடப்பட்ட நிதி எவ்வாறு மீள அறவிடப்படும் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட நிதி கையாடல் தொடர்பாக அக்கிளைகளின் பிரதானிகள் இறுதிப் பொறுப்பை ஏற்க வேண்டுமா என்பதையும்;

(ii) ஆமெனில், அப்பிரதானிகளுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2007/2024

கௌரவ மயந்த திசாநாயக்க,— கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையின் ஈர வலயத்தில் அமைந்துள்ள வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறியமை உணவு உற்பத்தி வீழ்ச்சியடைவதற்குக் காரணமாக அமைந்துள்ளதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) தரிசு நிலங்களில் பயிரிடுவதற்காக முன்மொழியப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாதென்பதையும்;

(iii) விவசாயிகள் நெற் செய்கையிலிருந்து வெளியேறியுள்ளமையின் காரணமாக வயல் நிலங்கள் தரிசு நிலங்களாக மாறியுள்ளன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) விவசாயிகள் நெற் செய்கையிலிருந்து வெளியேறுவதற்கு ஏதுவான காரணங்கள் யாவை என்பதையும்;

(v) அவற்றுக்கு வழங்கப்பட்டுள்ள தீர்வுகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) நெற் செய்கையுடன் தொடர்புடையதாக அமைச்சு, மாகாண மற்றும் பிரதேச மட்டங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை தனித்தனியே எத்தனை என்பதையும்;

(ii) கமத்தொழில் துறையை மேம்படுத்துவதற்காக புதிய தேசியக் கொள்கை ஒன்றினை அறிமுகப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், அக்கொள்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2023/2024

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மட்டக்களப்பு மாவட்டத்தில், மண்முனை தெற்கு எருவில்பற்று பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட மகிழூர் பிரதேசத்தில், மகிழூர் மத்திய மருந்தகம் நிறுவப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) மக்கள் மிக நீண்ட காலமாக குடியிருந்த காணியொன்றை கையகப்படுத்தி மேற்படி மருந்தகம் நிறுவப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) அம்மக்களுக்கு குடியிருப்பதற்காக வேறொரு இடத்தில் மாற்றுக் காணிகள் வழங்கப்படும்போது முன்பிருந்த காணியை விட அளவில் குறைந்த காணியொன்று அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், இதற்கான தீர்வை வழங்க நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) ஓந்தாச்சிமடம், குறுமண்வெளி, மகிழூர், எருவில் ஆகிய கிராமங்களில் வசிக்கும் மக்கள் பயன்பெறும் அம்மருந்தகத்திற்கென நிரந்தர வைத்தியர், நோயாளர் காவு வண்டி சேவை வசதிகள், போதியளவிலான கட்டில்கள் மற்றும் போதிய கழிவறை வசதிகள் இல்லையென்பதை அறிவாரா?

(ii) ஆமெனில், மேற்குறிப்பிட்ட தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iii) அந்நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2043/2023

கௌரவ லலித் எல்லாவல,— விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) சூரியவெவ, மஹிந்த ராஜபக்ஷ சர்வதேச கிரிக்கெட் விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக வெளிநாட்டு நன்கொடைகள் கிடைக்கப்பெற்றனவா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு வெளிநாட்டு நன்கொடையின் பெறுமதி தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக கேள்வி மனுக்கள் கோரப்பட்டனவா என்பதையும்;

(ii) இல்லையெனில், குறித்த கட்டுமான நிறுவனம் தேர்ந்தெடுக்கப்பட்ட முறையியல் யாதென்பதையும்;

(iii) நிர்மாணப் பணிகள் வெளிநாட்டு நிறுவனமொன்றினால் மேற்கொள்ளப் பட்டிருப்பின், அதன் இலங்கை முகவர் யார் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) விளையாட்டு மைதானத்தை நிர்மாணிப்பதற்காக செலவிடப்பட்டுள்ள அரசாங்க நிதியின் அளவு எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி நிதி பெறப்பட்ட நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி விளையாட்டு மைதானம் திறக்கப்பட்ட திகதி தொடக்கம் இது வரையில் அதன் வருமானம் மற்றும் செலவினம் ஒவ்வொரு ஆண்டின் அடிப்படையில் தனித்தனியாக எவ்வளவு என்பதையும்;

அவர் மேலும் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

2056/2024

கௌரவ வேலு குமார்,— அமைச்சரவை அங்கத்தவர் அல்லாத அரச பெருந்தோட்ட தொழில்முயற்சிகள் மறுசீரமைப்பு அமைச்சர் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1992 ஆம் ஆண்டு அரசாங்கத் தோட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டபோது, கண்டி மாவட்டத்தில் மக்கள் தோட்ட அபிவிருத்திச் சபைக்குச் சொந்தமான போஹில் தோட்டத்தில் காணப்பட்ட பிரிவுகளின் (Divisions) எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) அப்பிரிவுகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பிரிவுகளில் 2015ஆம் ஆண்டளவில் பயிரிடாது கைவிடப்பட்ட பிரிவுகள் இருந்தனவா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டு தொடக்கம் 2015 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் மேற்படி தோட்டத்தின் காணித் துண்டுகள் / கட்டடங்கள் வெளி ஆட்களுக்கு / தனியார் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அத்தகைய ஒவ்வொரு நபர் / தனியார் நிறுவனத்தின் பெயர் மற்றும் வழங்கப்பட்டுள்ள காணித் துண்டுகள் / கட்டடங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

(iii) மேற்படி(i)இல் குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு காணித் துண்டில் / கட்டடத்தில் வதியும் குடும்பங்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எத்தனை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2074/2024

கௌரவ துஷார இந்துனில் அமரேசன,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வெளிநாட்டு முதலீடுகளின் அடிப்படையில் இலங்கையில் நடைமுறைப் படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டங்களின் எண்ணிக்கையும் மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்தின் பெறுமதியும் உற்பத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கையும் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மீள் புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை மேலும் மேம்படுத்துவதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2024 மே 14, செவ்வாய்க்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

4/2024

கௌரவ சட்டத்தரணி வசந்த யாப்பாபண்டார,— போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) முச்சக்கர வண்டிச் சேவையின் மூலம் மக்களின் போக்குவரத்துத் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகின்ற போதிலும், அச்சேவையை ஒழுங்குபடுத்துவதற்கு முறையான பொறிமுறையொன்று இல்லை என்பதையும்;

(ii) முச்சக்கர வண்டிச் சாரதிகள் முறைகேடாக பணம் அறவிடுவதன் காரணமாக பயணிகள் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட முச்சக்கர வண்டிகளில் கண்டி மாவட்டத்திலுள்ள முச்சக்கர வண்டிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) முச்சக்கர வண்டிச் சேவையை ஒழுங்குபடுத்துவதற்காக தற்போது முறையான பொறிமுறையொன்று உள்ளதா என்பதையும்;

(iii) முச்சக்கர வண்டிச் சாரதிகளை அடையாளம் காண்பதற்காக அடையாள அட்டை மற்றும் சீருடையை அறிமுகப்படுத்துவதற்கும் முச்சக்கர வண்டிக்கு கட்டண மானியொன்றைப் பொருத்துவதற்கும் முன்மொழியப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி முன்மொழிவுகள் அமுல்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

43/2024

கௌரவ புத்திக பத்திறண,— வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சிங்கராஜ உலக மரபுரிமை வன ஒதுக்குப் பிரதேசத்தைச் சுற்றி அமைந்துள்ள 13 ஒதுக்குக் காடுகளை சிங்ஹராஜ உலக மரபுரிமை வன ஒதுக்குப் பிரதேசத்திற்குள் உள்ளடக்கி அந்த வன ஒதுக்கத்தின் விஸ்தீரணத்தை 30,000 ஹெக்டெயர் வரை அதிகரிப்பதற்கான வர்த்தமானப் பத்திரிகையில் முன்னாள் சனாதிபதி கௌரவ மைத்திரிபால சிறிசேன அவர்கள் 2019 ஆம் ஆண்டில் ஒப்பமிட்டுள்ளார் என்பதையும்;

(ii) ஆயினும், இவ்வர்த்தமானப் பத்திரிகை இதுவரை பிரகடனப்படுத்தப்படவில்லை என்பதையும்;

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி வர்த்தமானப் பத்திரிகைக்கு அமைவாக, சிங்ஹராஜ உலக மரபுரிமை வன ஒதுக்குப் பிரதேசத்துக்குள் உள்ளடக்குவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த ஒவ்வொரு ஒதுக்குக் காடும் அவற்றின் நில விஸ்தீரணம் ஏக்கர்களிலும் தனித்தனியே யாதென்பதையும்;

(ii) மேற்படி வர்த்தமானப் பத்திரிகை வெளியிடப்படுவது தாமதமடைவதற்கு ஏதுவாக அமைந்த காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி வர்த்தமானப் பத்திரிகையை பிரகடனப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

310/2024

கௌரவ ஹேஷா விதானகே,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் இன்றளவில் செயற்பாட்டிலுள்ள முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) அவற்றில் அரசாங்கத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) அரசாங்கத்தில் பதிவு செய்யாது முன்பள்ளிகளை நடத்திச் செல்ல முடியுமா என்பதையும்;

(iv) முன்பள்ளிகளைக் கண்காணிப்பதற்கான முறையியலொன்று உள்ளதா என்பதையும்;

(v) முன்பள்ளியொன்றை நடத்திச் செல்வதற்காக பூர்த்தி செய்யப்பட வேண்டிய அடிப்படைத் தகைமைகள் யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

357/2024

கௌரவ டலஸ் அழகப்பெரும,— மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இன்றளவில் இலங்கையின் நீதிவான் நீதிமன்றங்களிலும் மேல் நீதிமன்றங்களிலும் விசாரிக்கப்பட்டு வரும் சிறுவர் துஷ்பிரயோகங்களுடன் தொடர்புடைய வழக்குகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி எண்ணிக்கையானது, வழக்கு விசாரணை ஆரம்பிக்கப்பட்டு 2, 4, 6, 8 மற்றும் 10 வருடங்கள் எனும் கால வகைப்படுத்தலின் அடிப்படையில் ஒவ்வொரு மாவட்டத்திற்கமைவாக எத்தனையென்பதையும்;

(iii) 2020 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை நீதிமன்ற நடவடிக்கைகளுக்காக ஆற்றுப்படுத்தப்படாத போதிலும் இலங்கைப் பொலீசாருக்கு அல்லது தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபைக்குச் செய்யப்பட்டுள்ள சிறுவர் துஷ்பிரயோக முறைப்பாடுகளின் எண்ணிக்கை ஒவ்வொரு மாவட்டத்திற்கமைவாக எத்தனையென்பதையும்;

(iv) 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இடம்பெற்றுள்ள சிறுவர் துஷ்பிரயோகங்கள் காரணமாக பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகியுள்ள பிள்ளைகளின் எண்ணிக்கை பாலின அடிப்படையில் எத்தனையென்பதையும்;

தனித்தனியாக அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பொலிசாருக்கு அல்லது அதிகாரசபைக்கு அறிக்கையிடப்படாத சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பான தரவுகள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி சிறுவர் துஷ்பிரயோகங்களின் எண்ணிக்கை வருடாந்த அடிப்படையில் எத்தனையென்பதையும்;

(iii) கடந்த இரண்டு வருட காலப்பகுதியில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் படிப்படியாக அதிகரித்துள்ளன என்பதை ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பிலான நீதி நிர்வாக தாமதங்களைத் தவிர்ப்பதற்காக எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

367/2024

கௌரவ கயந்த கருணாதிலக்க,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் மத்திய அரசாங்கம், மாகாண சபைகள் மற்றும் தனியாருக்குச் சொந்தமான வைத்தியசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) அந்த வைத்தியசாலைகளில் உள்ள கட்டில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மத்திய அரசாங்கம் மற்றும் மாகாண சபை வைத்தியசாலைகளில் அமைக்கப்பட்டுள்ள அவசர சிகிச்சைப் பிரிவுகளில் காணப்படும் கட்டில்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) இலங்கையில் உள்ள பதிவு செய்யப்பட்ட வைத்தியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) தற்போது சேவையில் உள்ள ஆண் மற்றும் பெண் தாதிமார்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) அரசாங்க வைத்தியசாலைகளில் கடமையாற்றும் வைத்தியர்கள், தாதிமார் தவிர்ந்த ஏனைய பணியாட்டொகுதியினரின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கு ஏற்ப வெவ்வேறாக யாதென்பதையும்;

(iv) நாட்டில் இன்றளவில் காணப்படுகின்ற வைத்தியர்-நோயாளர்களின் விகிதமும் நோயாளர் - கட்டில்களின் விகிதமும் வெவ்வேறாக யாவையென்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

372/2024

கௌரவ நிரோஷன் பெரேரா,— பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட உயிர்த்த ஞாயிறுதின தாக்குதலின் பின் இலங்கைக்குள் வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், வெடிபொருட்கள் கைப்பற்றப்பட்ட இடம், வெடிபொருள் வகை, அளவு, அச்சந்தர்ப்பத்தில் கைதுசெய்யப்பட்ட நபர்களின் பெயர்கள், அவர்களின் வதிவிடங்கள் மற்றும் குறித்த விசாரணைகளின் முன்னேற்றம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி கைது நடவடிக்கைகள் தொடர்பில் தேசிய பாதுகாப்புப் பேரவை விழிப்பூட்டப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறு விழிப்பூட்டப்பட்டுள்ள திகதிகள் யாவை என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

379/2024

கௌரவ தயாசிறி ஜயசேக்கர,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்களை (ஹெஜின் உடன்படிக்கைகளை) நாடுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) 2010 ஆம் ஆண்டு தொடக்கம் இதுவரை கூட்டுத்தாபனத்தினால் எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்கள் மேற்கொள்ளப்பட்ட நிதி நிறுவனங்கள் ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக யாவை என்பதையும்;

(iii) மேற்படி காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்களினால் பெறப்பட்ட இலாபம்/நட்டம் ஒவ்வொரு ஆண்டின் பிரகாரம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி கொடுக்கல் வாங்கல்களின்போது கூட்டுத்தாபனத்தைப் பிரதிநிதித்துவம் செய்த அலுவலர்கள்/நபர்கள் யாவர் என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்கள் காரணமாக ஏற்பட்ட நட்டங்கள், தற்போதைய எரிபொருள் விலையேற்றத்தின் மீது தாக்கம் செலுத்தியுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அத்தாக்கத்தினைக் குறைப்பதற்கு மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) எதிர்காலத்திலும் இத்தகைய நட்டங்கள் ஏற்படக்கூடிய எதிர்கால இழப்புக் காப்பு கொடுக்கல் வாங்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

465/2024

கௌரவ அஜித் மான்னப்பெரும,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2024 ஆம் ஆண்டு இலங்கையில் அமுல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ள பாரியளவிலான வலுசக்தி கருத்திட்டங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) அவற்றின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கருத்திட்டங்களின் மூலம் தேசிய மின் கட்டமைப்பில் இணைப்பதற்கு எதிர்பார்க்கப்படும் மின் அலகுகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(iv) புதுப்பிக்கத்தக்க வலுசக்தி கருத்திட்டங்களின் மூலம் மின் அலகு ஒன்றின் விலையில் ஏற்படுத்தப்படும் தாக்கம் யாது என்பதையும்;

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

1243/2024

கௌரவ குமாரசிறி ரத்நாயக்க,— சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மொனறாகலை மாவட்டத்தில், காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு உரித்தான காணிகளின் அளவு யாது;

(ii) மேற்படி காணிகளில் தற்போது மக்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளின் அளவு யாது;

(iii) மேலே (ii) இல் குறிப்பிடப்படும் காணிகளின் அளவானது ஒவ்வொரு பிரதேச செயலகப் பிரிவுக்கமைவாக தனித்தனியாக யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மக்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள காணிகளுக்கு இன்றளவில் காணி உறுதிகள் வழங்கப்பட்டுள்ளனவா;

(ii) ஆமெனில், 2021 ஆம் ஆண்டு முதல் இதுவரை குடியிருப்பாளர்களுக்கும் பயிர்ச் செய்கையாளர்களுக்கும் வழங்கப்பட்டுள்ள காணி உறுதிகளின் எண்ணிக்கை மற்றும் அக்காணிகளின் அளவு ஒவ்வொரு வருடத்துக்கும் ஏற்ப தனித்தனியாக யாது;

(iii) காணி உறுதிகள் வழங்கப்படாதுள்ள காணிகளுக்கு எதிர்காலத்தில் உறுதிகளை வழங்குவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2082/2024

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ,— மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் பிராந்திய அலுவலகங்களை அமைப்பதற்காகவும் மேற்படி சபையின் வேறு நடவடிக்கைகளுக்காகவும் வாடகைக்குப் பெறப்பட்டுள்ள கட்டடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(ii) 2015 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை மேற்படி கட்டடங்களுக்காக செலுத்தப்பட்டுள்ள வாடகைத் தொகை ஒவ்வொரு வருட அடிப்படையில் தனித்தனியே எவ்வளவு என்பதையும்;

(iii) இலங்கை மின்சார சபை நட்டத்தில் இயங்கும் சந்தர்ப்பத்தில் கட்டடங்களுக்காக அதிக வாடகை செலுத்தப்படாதிருத்தல் வேண்டுமென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா;

(iv) இந்த நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்,

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?